நெல்லுடைக்கும்' மா அரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் பொலித்தீன், கேக், குளிர்பான தயாரிப்புக்களுக்கு
ராஜூ ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மக்கங்கள்! ஆறு!

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கைக்கடிகாரம்! அழகுசாதன, அன்பளிப்பு எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்களுக்கு நாடுங்கள்!
ராஜூ ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி. யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 21 வியாழக்கிழமை (04 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 158

## அம்பாறை கண்ணியில் 4 படையினர் பலியாகினர்

அம்பாறை, மே 4

கடந்த திங்கட்கிழமை அம்பாறை மகாஓயாப் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்று கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதே தினம் ஏறாவூர் தளவைக் கிராமத்தில் பொலீஸ் காவலரண் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பொலீஸ்காரர் ஒருவரும் காயமடைந்துள்ளார். (ஒ 7)

## 50 வீத இலங்கையர்கள் சமாதான விரும்பிகள்!

### சர்வதேச ஆய்வு தெரிவிக்கிறது

கொழும்பு, மே 4

இலங்கை மக்களில் 50 சதவீதத்தினருக்கும் அதிகமானோர் சமாதானப் பேச்சுக்களுக்கே ஆதரவு தெரிவிக்கின்றனர்.

சர்வதேச நிறுவனம் ஒன்று அண்மையில் மேற்கொண்ட

[6ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் புலிகள் தாக்குதல்; 4 இராணுவத்தினர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, மே 4

மட்டக்களப்பில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் நான்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

நேற்றுக் காலை 9. 30 மணியளவில் நான்காம் முச்சந்தி இராணுவ முகாமிலிருந்து பெண்டுகள் சேனைப் பகுதி நோக்கி முன்னேறிவந்த நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீதே பெண்டுகள் சேனைப் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர். இவ்வாறு தப்பி ஓடியவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலின் போது பலியான நான்கு இராணுவத்தினரதும் சடலங்களைக் கைப்பற்றிய புலிகள் அவற்றைப் பிறிதொரு இடத்தில் போட்டுள்ளனர்.

இதேவேளை —

வாழைச் சேனைப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதாகவும், ஐவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6-7)

### மட்டு. நகரைச் சூழவுள்ள

## 4 காவலரண்கள் மீது சனியன்று புலிகள் தாக்கு

மட்டக்களப்பு மே 4

மட்டக்களப்பு நகரைச் சூழவுள்ள அதிக பாதுகாப்புள்ள நான்கு காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் கடந்த சனியன்று தாக்குதல் நடத்தியதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜயந்திபுர. விஜேபுர, பழமீன்மடு சந்துருக்கொண்டான் ஆகிய பகுதிகளிலுள்ள காவலரண்கள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

இதனை அடுத்து மட்டக்களப்பு நகரில் தேடுதல் நடத்திய பொலீசார் மூன்று தமிழ் இளைஞர்களைப் பிடித்துச் சென்றுள்ளனர்.

இருதயபுரம் பகுதியில் செவ்வாய்க்கிழமை புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் ஸ்ரீலங்காப்பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

# வட - கிழக்கில் விமான நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு நிபுணர்கள் அழைக்கப்படுவர்

### திருமலையில் வசிப்போருக்கு

## குடும்பப் பதிவு அட்டை பொலீஸாரால் விநியோகம்

யாழ்ப்பாணம், மே. 4

திருகோணமலை பகுதியில் நிரந்தரமாக வசிப் போருக்கான குடும்பப் பதிவு அட்டைகளை பொலீஸார் தற்போது விநியோகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம சேவையாளரின் சிபார்சுடன் இக்குடும்பப்பதிவு அட்டைகள் பொலீஸ் நிலையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்குடும்ப அட்டையில் பதியப் பட்டோரைத் தவிர வேறு எவராவது வீட்டில் தங்கியிருந்தால் அவர் பொலீஸாரால் கைது செய்து அழைத்துச் செல்லப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமலைத் துறைமுகத்தில் அண்மையில் இரு கடற்படை கப்பல்கள் தகர்க்கப் பட்ட.தன் பின் இந்த நடைமுறையை பொலீஸார் அமுல்படுத்தியுள்ளதாகத் தெரியவந்தது.

## கப்பல் பயணிகளிடம் பற்றறிகள் பறிமுதல்!

வடமராட்சி, மே. 4

கப்பல் பயணிகளிடம் இருந்த "ரோச்" பற்றறிகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த நரோமா. பிளாப்பயன் கப்பல் பயணிகளிடமே திருகோணமலையில் வைத்து கடற்படையினர் பற்றறிகள் பறிமுதல் செய்தனர்.

இதேவேளை —

பென்ஷன் வவுச்சர்கள் சுருக்கெழுத்து பரீட்சைக்கான வினாத்தாள்கள் போன்றவை "நரோமா" கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

## தமிழக சட்டசபையில் நேற்றுக் கைகலப்பு!

### ஒலிபெருக்கிகள் உடைந்தன!!

சென்னை, மே 4

தமிழ்நாடு சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் ஆளும் அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கும் இடையே நேற்றுக் கைகலப்பு ஏற்பட்டு ஒலிபெருக்கிகள் உடைத்து எறியப்பட்டன.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் "கொடும்பாவி"யை ஆளும் கட்சியினர் எரித்ததாக எதிர்க்கட்சித் துணைத்தலைவர் டானியல் ராஜ் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தார்.

அதைத் தொடர்ந்து எழுந்த வாதப் பிரதிவாதங்களை அடுத்தே கைகலப்பு ஏற்பட்டது.

இறுதியில் காங்கிரஸ் உறுப்பினர்கள் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர். (ஒ-க)

## தனிப்பட்டோர் பெறுபேறுகள் தபாலில்

யாழ்ப்பாணம், மே 4

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் நேற்று 'நரோமா' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

அவை நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டுவிட்டதாக வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்துள்ளார். (ஒ-4-7-173)

## மிக் விமானங்களை வாங்கவும் முடிவு

### ஏயர் வைஸ் மார்ஷல் ரணசிங்க தகவல்

கொழும்பு, மே 4

எதிர்காலத்தில் வடக்கு — கிழக்கில் மேற்கொள்ளப்படும் விமானப் படை நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு யுத்த நிபுணர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கு ஸ்ரீலங்கா படைகள் தரப்பு முடிவு செய்திருக்கிறது.

நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட "மிக்" விமானங்கள் போன்றவற்றை விமானப்படைக்கு கொள்வனவு செய்யவும் ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

ஸ்ரீலங்கா விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க இத்தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்களைச் சுட்டுவீழ்த்துவதற்குரிய ஏவுகணைப் பலத்தை தாங்கள் பெற்றிருப்பதை அடுத்தடுத்து இருநாட்களுக்குள் விடுதலைப்புலிகள் நிரூபித்திருப்பதை அடுத்து - ஸ்ரீலங்கா விமானப்படையின் எதிர்கால நடவடிக்கைகள் கேள்விக்குறியாகியிருக்கும் நிலையில் —

மேற்படி தகவலை விமானப்படைத் தளபதி வெளியிட்டிருக்கிறார்

புலிகளின் தாக்குதல் பீதிக்கு அஞ்சி வடக்கு- கிழக்கில் உள்ள தனது விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் அனைத்தையும் விமானப்படை தரையில் நிறுத்தி வைத்திருப்பது தெரிந்ததே.

புலிகளின் ஏவுகணைப் பலத்துக்கு எதிர்த்து நின்று பிடிக்கக் கூடிய —தொழில் நுட்பத் திறனும், நவீன தொடர்பு சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ள விமானங்களையும், உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு அரசு அவசர நடவடிக்கைகள் எடுத்து வருவதாக குறிப்பிட்ட விமானப் படைத் தளபதி —

இத்தகைய வசதிகளைக் கொண்ட — மிக்' ரக விமானங்கள் சிலவற்றைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (உ-6)

## அவசரமாக சந்திரிகா நாடு திரும்பியது ஏன்?

கொழும்பு. மே 4

விடுதலைப் புலிகளால் கடந்த சனியன்று சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்தில் பயணஞ் செய்து பலியான மூன்று பத்திரிகையாளர்களினதும், மற்றும் இரு விமானப் படை உயரதிகாரிகள் இருவரினதும் இறுதிச் சடங்குகளில்

[6ஆம் பக்கம் பார்க்க]

### புலிகளுக்கு எதிராகப் போராட

## போர் முனைக்கு வரும் இரு பௌத்த பிக்குகள்!

கொழும்பு, மே 4

வடக்கு - கிழக்குப்பகுதி போர் முனைகளில் — புலிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு — இரு பௌத்த பிக்குகள் இராணுவத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

பௌத்த பிக்குகள் இராணுவத்தில் சேர்வது வழக்கத்துக்கு மாறானதெனவும் மாணவர்களுக்கு கல்வி போதிப்பதே இதுவரை அவர்களது பிரதான பணியாக இருந்து வந்தது எனவும் 'வெரித்தாஸ்' வானொலி தனது செய்தியாளரை மேற்கோள் காட்டி நேற்றிரவு கூறியது.

இலங்கை இராணுவத்துக்கு அவசரமாக பத்தாயிரம் பேரைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் இப்பொழுது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. [ஒ-7]

# யாழ். வந்த உணவுப் பொருள்களை கடற்படையினர் பறித்தெடுத்தனர்!

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கென கப்பலில் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருள்களில் ஒரு பகுதியை கடற்படையினர் தமது தேவைக்கென எடுத்து விட்டதாக அறியவந்துள்ளது

காங்கேசன் துறையில் தரித்து நின்ற "லங்கா முடிதா" கப்பலை நயினாதீவுக்கு வருமாறு பணித்து அங்கு வைத்து அதிலிருந்த உணவுப் பொருள்களில் 250 மெற்றிக் தொன்களை இறக்கி விட்டு மீண்டும் கப்பலை காங்கேசன் துறைக்கு அனுப்பினர் என்றும் —

காங்கேசன் துறையில் நின்ற மற்றொரு கப்பலான "மாஹோ" விலிருந்து 50 பரல்கள் மண்ணெண்ணெயை இறக்கியதாகவும் — தகவல்கள் தெரிவித்தன.

### மாஹோ வந்தது

50 பரல்கள் மண்ணெண்ணெய் குறைந்த நிலையில் நேற்று பருத்தித்துறை வந்த "மாஹோ" மிகுதி மண்ணெண்ணெய் பரல்களை இறக்கியது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் 'மாஹோ' பருத்தித்துறை வந்து சேர்ந்தது உடனடியாகவே கப்பலிலிருந்து மண்ணெண்ணெய் இறக்கும் வேலைகள் தொடங்கின.

இதேவேளை காங்கேசன் துறையில் தரித்துள்ள "லங்காமுடித" கப்பலும் விரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது'

'ஹபரண' கப்பலும் ஒரு தொகுதி மாவுடன்திருமலையிலிந்துஇங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுறது. (அ-4-173)

## உணவுக் கப்பல்களை அனுப்ப உயர்மட்ட மாநாட்டில் முடிவு

கொழும்பு, மே 4

காங்கேசன்துறையில் நிற்கும் "மாஹோ", "லங்கா முடிதா" கப்பல்களில் உள்ள பொருள்களை வழமைபோல் பருத்தித்துறைக்குக் கொண்டு போய் இறக்குவது என்று நேற்று கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

அந்த முடிவைத் தொடர்ந்தே "மாஹோ" நேற்று பிற்பகல் பருத்தித்துறை சென்று [illegible] ணெயை இறக்கியது.

'லங்கா முடித[illegible] அல்லது நாளை பருத்தித்துறை சென்று உணவுப் பொருள்களை இறக்க உள்ளது.

வடபிராந்திய கடற்படை தளபதியே கப்பல்கள் இரண்[illegible] செல்லாமல், தடுத்துவைக்க[illegible] லப்படுகிறது. (அ-4-6)

### வீரச்சாவு

கொழும்பு,மே4

கடந்த திங்களன்று வவுனியா பூவரசங்குளம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் [illegible] சிங்காரம் (சுந்தரராசா ஜெயக்குமார் - இளிநொச்சி) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஒ—7)

## பொன்னாலை நோக்கி ஷெல் தாக்குதல்

சுழிபுரம், மே 4

காரைநகரில் இருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை 9 30 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தடபட்டது.

ஷெல்கள் மூளாய் ஆலடி மடப்பகுதியை அண்டிய வெளிகளில் விழுந்து வெடித்தன. (ஒ-28)

### அராலித்துறை சம்பவம் குறித்து

## விசாரணை நடத்த வந்த அதிகாரிகள் பலாலியில்!

### திரும்பிச் செல்ல விமானம் இல்லை!

கொழும்பு, மே 4

அராலித்துறை சரவணைக் குடா காவலரண் தகர்ப்பு சம்பவம் குறித்து விசாரணை செய்ய மேஜர் ஜெனரல் வஜிர விஜேரட்ன தலைமையிலான மூவர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை ஸ்ரீலங்கா அரசு நியமித்துள்ளது

விசாரணைக்கு வந்த இந்தக் குழுவினர் தொடர்ந்து சில தினங்கள் பலாலியிலேயே தங்கவேண்டி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை பலாலிக்கு ஏற்றி வந்திருந்த அவ்ரோ விமானமே கடந்த சனியன்று புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அவ்வேளையில் ஊர்காவற்றுறையில் தங்கியி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தக்காளி விதை, பசன் கன்று விற்பனைக்கு உள்ளது. Tast Line Industries (Pvt.) Ltd., 14, Seenier Lane, Jaffna. (சி-1102)

கண்ணாடி அலுமாரி 2x6 அடி பார்வையிடலாம். ஒட்டகப்புலம் சமத்தர் முறிவு, நோவு வைத்திய நிலையம், 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம், முன்னைய ஆசீர்வாத அச்சகம். [36499]

நல்லின யமுனாப்பாரி ஆடும், ஆறுமாத சணல் மறிக்குட்டியும் விற்பனைக்குண்டு. 51, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி, [நேர்சிங் ஹோம் முன்பாக], யாழ்ப்பாணம். (8515)

## தேவை

புடைவை வியாபார ஸ்தாபனத்திற்கு பில் போட்டு வியாபாரம் செய்யக்கூடிய ஒரு பெண் தேவை. நேரில் வரவும். தொடர்பு: த. சம்பரப்பிள்ளையும் மைந்தரும், இல 21, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம். [36496]

## தவறிவிட்டது

2 5 95 அன்று 575902077 2X இலக்க அடையாள அட்டையுடனும், பணத்துடனும் சறப்பு பரீஸ் கஸ்தூரியார் வீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 72, ஸ்ராக்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [36503]

## றப்பர் சீல்

கொழும்பு றப்பரில் மூன்று நாட்களில் றப்பர் சீல் செய்து கொள்ளவும். பிளாஸ்ரிக் நேம் போட், றப்பர் பிளேட் விளம்பர போட் கவர்ச்சியாக அமைக்கவும் தொடர்பு கொள்ளவும்- "விமா" ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (தனியார் வைத்தியசாலை முன்) [36498]

## கோழி குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து 6-5-95 சனிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36482]

## சோதிடம்

வெள்ளூா ஜெனன ஜாதகக் குறிப்பு உடன் எழுதிக் கொள்ள மற்றும் ஜாதகக் குறிப்பு பலன் பார்க்க ஸ்ரீமானவ விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர். [36491]

## லேகஹவுஸில் நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

கொழும்பு, மே. 4

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் விமானம் சுடப்பட்ட சம்பவத்தில் மரணமடைந்த மூன்று பத்திரிகையாளர்களையும் நினைவுகூரும் வகையில் "லேக்கவுஸ்" நிறுவனம் நேற்று புதன்கிழமையை துக்க தினமாக அனுஷ்டித்தது.

கொல்லப்பட்டவர்களின் அஸ்திகள் நேற்று கொழும்பு டல மகளின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு ஆன்ம சாந்தி கிரியைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்று உலக பத்திரிகைச் சுதந்திர தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-14)

## திறந்த பல்கலை. மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே. 4

இலங்கை திறந்த பல்கலைக்கழக சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறியின் 94 95ஆம் கல்வியாண்டு மாணவருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

சகல மாணவர்களும் சமூகம் தந்து பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்து தங்களுக்குரிய கணக்கியலும் நிதியியலும் புத்தகத்தை பெற்றுக்கொள்ளுமாறு பிராந்திய இயக்குநர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (ஐ-14)

---

வெளிவந்து விட்டது!

## அறிவுக்களஞ்சியம் - 31

[சி-1139]

---

## SCIENCE CENTRE KARAVEDDY

## A/L 97

### கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

கணிதம் — திரு. அருளானந்தம் திங். செவ். வெள். 4-6

பௌதிகம் — திரு. கணேஷன் சனி, ஞாயி 4-15 — 5-15

இரசாயனம் — திரு. மணியம் சனி, ஞாயிறு 5-15 — 6-15

ஆரம்பம்: 06-05-1995 [சனி]

[35509]

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து, கீழே குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 95-05-31 திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பதவிகள்**

அ. கருவிப் பொறிவலர் தரம் II

ஆ. காவற்பொறுப்பாளர் சக பழுது பார்ப்பவர் (சங்கீதக்கருவிகள்)

**சம்பளத்திட்டம்;**

அ. கருவிப் பொறிவலர் தரம் II ரூபா 2575 — 11X55— 3180/- மாதமொன்றுக்கு.

ஆ. காவற்பொறுப்பாளர் சக பழுது பார்ப்பவர் (சங்கீதக்கருவிகள்) ரூபா 2745 - 10 X55, 7X65 — 3750/- மாதமொன்றுக்கு

குறிப்பு இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவு படிப்புட்பட ஏனைய படிகளும் வழங்கப்படும்)

**தகைமைகள்:**

அ. கருவிப் பொறிவலர் தரம் II

1. குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும.
2. "அமுக்கம் பதி கருவி" போன்ற நுண்ணிய மானிகளை பராமரிப்பதிலும், திருத்துவதிலும் அரசாங்கத்திணைக்களமொன்றிலோ அரச கூட்டுத்தாபனமொன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றிலோ குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

தொழில் நுட்பக்கல்லூரி யொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் சான்றிதழை வைத்திருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆ. காவற்பொறுப்பாளர் சக பழுது பார்ப்பவர் [சங்கீதக் கருவிகள்]

1. இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க.பொ.த (சா.த.) தேர்வில் சித்தி

அல்லது

எட்டாம் வகுப்பில் சித்தியடைந்து மானிய ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் 5 ஆண்டுகள் நிரந்தர சேவையைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளவர்.

2. விண்ணப்பதாரி வயலின், சிதார், எஸ்ராஜ் ஆகியவற்றைப் பழுது பார்த்தலிலும் நரம்புகளைப் பொருத்துவதிலும் தபேலா, மிருதங்கம் என்பவற்றில் தோல் இடல், அவற்றில் பதனிட்ட தோலைப் பொருத்துதல், ஆர்மோனியத்தையும் இதர உள்நாட்டு சங்கீதக்கருவிகளையும் பழுது பார்த்தல் என்பவற்றில் ஆற்றல் உடையவராகவும் உயர் கல்வி நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் ஐந்தாண்டு அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வழங்கல் பதிவேடுகளைப் பேணுவதிலும் சங்கீதக்கருவிகளைப் பேணிக் காப்பதிலும் அனுபவம்.

குறிப்பு:

சங்கீதத்தில் அறிவுடையவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தெரிவு:

1. கருவிப் பொறிவலர் தரம் II தொழிற் தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்
2. காவற்பொறுப்பாளர் சக பழுது பார்ப்பவர் [சங்கீதக்கருவிகள்] செய்முறைப் பரீட்சை யொன்றின் மூலமும், நேர்முகப்பரீட்சை ஒன்றின்மூலமும்.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். இவ்வாறு சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு வயதுக் கட்டுப்பாடு எதுவுமில்லை.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

விண்ணப்பப்படிவங்களை கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு வில் 154 ஆவது இலக்கத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கூட்டுறவு சங்கத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1995 – 04 – 25

[சி 1131]

---

# தற்காலிக பின்னடைவு என்கிறார் விமானப் படைத் தளபதி ஒலிவர்

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்கள் தற்காலிக பின்னடைவே என்றும் — வடபகுதிக்கு துருப்புக்கள் மற்றும் பொருள்களை எடுத்துச் செல்லும் நடவடிக்கை அதனால் தடைப்படவில்லை என்றும் விமானப்படைத் தளபதி ஏயார் வைஸ் மாஷல் ஒலிவர் ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று பலாலியில் இடம் பெற்ற முதல் விமான விபத்து தொழில் நுட்பக் கோளாறினாலேயே ஏற்பட்டது என்று திட்டவட்டமாக கூறமுடியும். எனினும் சனிக்கிழமை நடந்த இரண்டாவது விமான விபத்து விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலினால் ஏற்பட்டது.

இராணுவத்தினரும் கடற்படையினரும் வடக்கே உணவுப் பொருள்களை எடுத்துச் செல்கிறார்கள் போதியளவு உணவுப் பொருள்கள் படையினரின் கையிருப்பில் உள்ளன. இவ்வாறு விமானப்படைத் தளபதி மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## மொடியூல் விநியோகம்

யாழ்ப்பாணம், மே, 4

சாவகச்சேரி பிராந்திய தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்களுக்கான புதிய மொடியூல்களை வழங்குவதற்கான இறுதிநாள் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆகும்.

அன்றைய தினம் காலை 8 மணி முதல் சாவகச்சேரி தொலைக்கல்வி நிலையத்தில் மொடியூல்கள் வழங்கப்படும். (இ-5)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் முருகேசு வீரசிங்கம்

தோற்றம்: 04 – 06 – 1922 மறைவு: 04 – 04 – 1995

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி.

545, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(36478)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி ஆராதனை அழைப்பு



### திருமதி பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம்

(முன்னாள் அதிபர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

தோற்றம்: 28 – 02 – 1933 மறைவு: 04 – 04 – 1995

"உயிர்த்தெழுதலும் ஜீவனும் நானே. என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னில் விசுவாசம் வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரிப்பதில்லை" (யோ. 11:25,26)

கடந்த 04 - 04 - 95 இல் கொழும்பில் காலமான எமது அருமைச் சகோதரி திருமதி பாக்கியலக்ஷ்மி இராஜேந்திரசிங்கம் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை வைத்தியசாலையில் வேண்டிய உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும், பின்னர் ஜெயரட்ன மண்டபத்தில் நடைபெற்ற அன்னாரின் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் சாத்தி மரியாதை செய்தவர்களுக்கும், பலவகைகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், அனுதாப, அஞ்சலிச் செய்திகள் வழங்கியவர்களுக்கும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பிரார்த்தனை அஞ்சலிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து நடத்தியவர்கள், கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று 04 – 05 - 95 (வியாழக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் பழையமாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
இ. இரத்தினசிங்கம் [சகோதரன்]

"ஜெய இல்லம்",
உடுப்பிட்டி.

(சி-1140)

---

## A/L 97 கலை, வர்த்தகம்

3 பிரிவுகளுக்கும் அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களும்

**06-05-95 சனி 8-00 மணிக்கு**

வகுப்புகளுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

★ பொருளியல் வகுப்பின் 4ஆவது பிரிவு ஆரம்பிக்கப்படுவதனால் முன்னர் அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

★ 05-05-95க்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

○ புதிய நேர அட்டவணைப்படி வகுப்புகள் நடைபெறும்.

○ A/L 95, 96 வகுப்புகள் 06-05-95 அன்று நடைபெற மாட்டா.

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1349)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 17 – 12 – 1968 மறைவு: 04 – 04 – 1995

### திருமதி லோகநாதன் பவானி

(சுதா)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று 04 – 05 – 1995 வியாழக்கிழமை நடைபெறும்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

கு. லோகநாதன் (கணவன்),
(ரஜனி ஐஸ்கிறீம் விற்பனையாளர்)
லோ. தமிழினி (மகள்)
உற்றார், உறவினர்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(36511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகில இலங்கை கம்பன் கழகம்
# கம்பன் விழா

15 ஆண்டு நிறைவு

வேராயிருந்தெம்மை விருட்சமாக்கியோர்



க. சிவராமலிங்கம் தேவன — வித்துவான் சி. ஆறுமுகம் — வித்துவான் கலாநிதி க. ந. வேலன்

## கம்பனைப் போற்றுதும்....

கம்பன்.

அவன் தமிழருக்குக் கிடைத்த அட்சய பாத்திரம்.

அள்ளி அள்ளி நம்முன்னோர்கள் தேவைக்கதிகமாக எடுத்த பின்பும் நமக்கும் புதிதாய்த் தருகிறான்.

அவன் நம் இனம் செய்த தவம்.

விடுவிக்க விடுவிக்க எல்லையின்றி விரிந்து வியப்புத் தருவது கம்ப சூத்திரம்.

கம்பக் கடலில் எத்தனை எடுத்தாலும் முத்துக்கள் முடிவதில்லை.

''கல்வியிற் பெரியன் கம்பன்'' — ஆம், வள்ளுவன் போன்ற தெய்வப் புலவரைப் பார்த்த பின்பும் கம்பன் பற்றிய நம் முன்னோரின் கணிப்பு இது.

கம்பனைக் கற்கக் கற்க, இவ்வார்த்தையின் உண்மை வானளவு விரிவதைக் காணலாம்.

எத்துணை ஆழமாகப் போனாலும் அதனினும் ஆழங் காட்டி நம்மனோர்க்கு அறிவின் எல்லையாய்க் காட்சி தருகிறான் கம்பக் கவி.

தனக்குக் காலத்தால் முந்திய பிந்திய புலவர்களின் கருத்துக்களைத் தன் காவியத்துள் அடக்கிக் காலங்கடந்து நிற்கிறான் கம்பக் கடவுள்.

அவனை மதவாதியாக, வர்க்க சார்பாளனாக, இன்னும் பலவாக இனங்கண்டு குறைசொல்பவர்களும் இல்லாமலில்லை.

குடையால் தம்மை மறைத்து, சூரியன் தம் குடைக்குள் அடக்கமெனக் கூறிக் குதூகலிக்கும் பேதை மாவர் செயல்கண்டு நாணி நகைத்து நிற்பர் அறிவோர்.

கடவுளை மறுக்கவே ஆளிருக்கும் இவ்வுலகில் கம்பனை மறுக்கவா ஆளிராது? தம் சொத்தைப் பேணாத அவர் தம் பேதைமைத் தொழில் கண்டு வீணாக வருந்திப் பயனில்லை.

இருளோடு மோதுவதை விட வெளிச்சத்தை வெளிக்கொணர்வது நன்றல்லவா?

நம் தமிழ்ச்சாதி அணையாத கம்ப விளக்கை கைவிடப் போவதில்லை.

கம்பன் தமிழ்ச்சாதியின் ஒரு குறியீடு.

அதனால் தான் கம்பன் நிற்கும் வரையும் தமிழ்ச் சாதி அமரத் தன்மை பெற்றிருக்கும் என்றான் பாரதி.

ஈழத்தமிழ்ச் சாதியும் சோதனையுற்றிருக்கும் இவ் வேளையில் கம்பனைப் போற்றுதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து நிற்கிறது.

கம்பனைப் போற்றுவதாவது தமிழினைப்போற்றுவதே.
கம்பனைப் போற்றுவதாவது கல்வியைப் போற்றுவதே.
கம்பனைப்போற்றுவதாவது கவிதையைப் போற்றுவதே.
நம் இனம் பொலியப் போற்றுவோம்.
கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க.

## பல்லோரும் வாழ்த்த... ...பணிந்தோம்

— நல்லை குருமகாசந்நிதானம் அவர்கள்
— அன்னை துர்க்கா துரந்தரி அவர்கள்
— பேராயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
— பேராயர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகள்
— துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம்
— பேராசான் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர்
— கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

ஆகியோர்

நல்வாழ்த்து நவின்றார்......... நன்றி

பதினைந்தாண்டுகளாய் பாரம் சுமந்தவர்கள்



தி. திருநந்தகுமார் தலைவர் — க. குமாரதாசன் செயலாளர் — Dr. கு. ஸ்ரீஇரத்தினகுமார் பொருளாளர்

## விழாவில் 'மகரயாழ்' விருது பெறும் சான்றோர்

### வைத்திய கலாநிதி து. ஜெயகுலராஜா

### கௌரவிக்கப்படும் மூதறிஞர்கள்

1. அமரர், 'கப்டனடிப் பொடி' சா. கணேசன் நினைவுப் பரிசில் — மகாவித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா, மட்டக்களப்பு.
2. அமரர் 'கம்பகலாநிதி' பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் நினைவுப் பரிசில் — ஆத்மஜோதி நா. முத்தையா, ஏழாலை.
3. அமரர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுப் பரிசில் — பண்டிதர் க. வீரகத்தி, கரவெட்டி.
4. நல்லை. திருஞான சம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நினைவுப் பரிசில் — பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்கள், காரைநகர்.
5. திருகோணமலை, கழகப் புலவர் அமரர் திரு. பெ. பொ. சிவசேகரம் நினைவுப் பரிசில் — திரு. சு. வேலுப்பிள்ளை, (சு. வே.) நாவற்குழி.
6. அமரர் பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசில் — ஓவியர் திரு. பி. எஸ். மணியம், நல்லூர்.

### பதினைந்தாண்டுகள் கம்பன் பணியில் துணை நின்றோருக்கான கௌரவம்

1. திரு. க. சிவராமலிங்கம் B. A.
2. திரு. க. சொக்கலிங்கம் M. A.
3. திரு. அ. நாகரெத்தினம் (அதிபர், குகன் ஸ்ருடியோ)
4. கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
5. கவிஞர் ச வே. பஞ்சாட்சரம்
6. கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி
7. கவிஞர் மன்னவன் கந்தப்பு (தலைவர், வடமராட்சி கம்பன் கழகம்)
8. திரு. ந. வித்தியாதரன் (அமைப்பாளர், திருகோணமலை கம்பன் கழகம்)
9. திரு. த. சிவகுமாரன் (அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)
10. திரு. இ. இரகுபரன் (அமைப்பாளர், வைரமு கம்பன் கழகம்)
11. திரு. ப. தயாபரன் (அமைப்பாளர், வடமராட்சி கம்பன் கழகம்)

## இவ்வாண்டுக் கம்பன் விழா நிகழ்ச்சித் தலைப்புகள்

| | நிகழ்ச்சி | பொருள் |
|---|---|---|
| 01. | ஆடல் வேள்வி | கம்பராமாயணக் காட்சிகள் |
| 02. | ஆய்வரங்கு | சமீகமும், கம்பனும் இயற்கையைக் கையாண்ட விதம் |
| 03. | பட்டி மண்டபம் | குறள் நெறியில், அயோத்யா காண்டத்தின் ஊடுபொருளாய்க் கம்பன் கொண்டது இல்லறச் சிறப்பே? துறவற மேன்மையே? ஊழின் வலியே? |
| 04. | கலைதெரி அரங்கம் | கம்ப நாடகம் |
| 05. | கவியரங்கம் | எண்ணங்கள் விரிந்து எங்கள் இதயங்கள் பேச இங்கு வண்ணங்கள் தலைப்பாகட்டும் |
| 06. | சுழலுஞ் சொற்போர் | அனுமனின் ஆற்றல் மிகு பேருரைகளில் தலையாயது எது? |
| 07. | கம்பன் இசையமுது | கம்பம் புகழ்ப் பாடல்கள் |
| 08. | இலக்கிய ஆணைக்குழு | இலங்கையின் தலைமைப் பிரஜையெனும் தகுதி வழங்கப்பட வேண்டியது இராவணனுக்கே? கும்பகர்ணனுக்கே? வீடணனுக்கே? இந்திரசித்தனுக்கே? |
| 09. | கருத்தரங்கம் | ''கம்ப சூத்திரம்'' |
| 10. | இளைஞர் அரங்கு | இவர்கள் பார்வையில் கம்பன் |
| 11. | மேன்முறையீட்டுப் பட்டி மண்டபம் | இரண்டாம் நாள் பட்டி மண்டபத் தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீடு |
| 12. | ஐயந்தெளி அரங்கு | கம்பனின் குறள் விளக்கம் |
| 13. | வழக்காடு மன்றம் | விஸ்வாமித்திரர் குற்றவாளி |
| 14. | வில்லிசை | அகலிகை சாப விமோசனம் |
| 15. | நாதஸ்வர இசை | ஈழத்தின் பிரபல நாதஸ்வர வித்துவான்கள் |

## ஆசி தருகிறார் ஆன்றோர்

கம்பன் புகழ் பாடிக்கன்னித் தமிழ் வளர்க்கும் பணியில் முன்னின்று உழைப்பவர்கள் அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர். ஆண்டு தோறும் கம்பனுக்கு விழாவெடுத்து எம் மக்கள் மத்தியிலே தமிழ் இலக்கிய இரசனையை ஏற்படுத்தி வருபவர்கள் இவர்கள். கருத்து வழி நாம் பார்க்கும் போது வள்ளுவன் பெற்ற மாபெரும் கவிஞன் கம்பன்.

''சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி'' என்ற பாடலடியிலே குறிப்பிட்டபடி ''சான்றோர் கவி'' என்ற சிறப்பு கம்பனின் கவிதைகளுக்கு முற்றிலும் பொருந்தும்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் பதினைந்தாவது ஆண்டு விழாவை மிகவும் விமரிசையாக நடாத்த முன் வந்திருப்பது ஈழத்தமிழ் உலகுக்கு உவகை தரும் நிகழ்ச்சியாகும் என்பதைத் தெரிவித்து மேலும் கம்பன் கழகப்பணி உயர்ந்தோங்க வாழ்த்துக் கூறி அமைகிறேன்.

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி J.P
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை

யாழ்ப்பாணத்து நல்லூரில் இயங்கும் அகில இலங்கைக்கம்பன்கழகமானது, இலங்கையிற் பல இடங்களில் தனக்குக் கிளைகள் அமைத்தும், ஆண்டு தோறும், ஆண்களும் பெண்களுமாகிய இளைஞர்களுக்கிடையில் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தித் தக்க பரிசில்கள் வழங்கியும், நூல்கள் தொகுத்து வெளியீடு செய்தும், இயலிசை நாடகமாகிய முத்தமிழின் பல் துறைகளும் சிறக்கப் பெருவிழா எடுத்தும், தமிழ் மூதறிஞர்களைக் கௌரவித்துப் பரிசில்கள் வழங்கியும், நாட்டுக்கு முன்னுதாரணமாகப் பலவகையிற் சேவை புரிந்த சன்றோர்களுக்கு மிக்க மதிப்பு வாய்ந்த மகர யாழ் விருது வழங்கியும் ஆற்றி வருந் தொண்டு தமிழுக்குக் காலத்தினாற் செய்யும் நன்றியாகும் தமிழ்க்குருகும் பரனருளால் அக்கழகப் பணி ஆண்டாண்டு தோறும் சிறப்பதாகுக.

இ. நமசிவாய தேசிகர்

அகில இலங்கைக்கம்பன் கழகம் தனது 15 ஆம் ஆண்டை நிறைவு செய்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். கம்பராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்தரங்குகள், பட்டி மன்றங்கள் வருடாந்த விழாக்கள் போன்றவற்றின் மூலம் கம்பன் கழகம் தமிழ் இலக்கியத் துறைக்கு சிறந்த பணியாற்றி வருகின்றது. அதன் செயற்பாடுகள் வருடா வருடம் விரிவாக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இச் செயற்பாடுகளில் முக்கியமானதும் இலக்கிய ஆர்வலர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவதுமானது வருடா வருடம் நடத்தப்படும் கம்பன் விழாவாகும்.

கம்பன் கழகத்தின் இவ்வாறான பணிகள் தொடர்ந்தும் சிறப்பாக அமைய கழகத்திற்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர்
க. குணரத்தினம்
துணைவேந்தர்.

## வாழ்வித்தோரை வணங்குகின்றோம்

இராமனையும்
சீதையையும்
நாம்
இரசித்துக்
களித்திருக்க
இலக்குவர்களாய்
பற்றறுத்து
இம் மண்காக்கும்
மைந்தர்களையும்

ஈழநாடு
தினபதி
[சிந்தாமணி]
வீரகேசரி
தினகரன்
உதயன் [சஞ்சீவி]
ஈழமுரசு
முரசொலி
ஈழநாதம்
THE ISLAND
திசை
ஆகிய
பத்திரிகைகளையும்

மல்லிகை
அமிர்தகங்கை
சிரித்திரன்
எரிமலை
கலைவாணி
(லண்டன்)
மாற்றம்
அறிவுக் களஞ்சியம்
ஆகிய
சஞ்சிகைகளையும்

வள்ளல்கள்
அறிஞர்கள்
பேச்சாளர்கள்
கல்விமான்கள்
கவிஞர்கள்
கலைஞர்கள்
பிரமுகர்கள்
அன்பர்கள்
ஆகியோரையும்

வணங்கி மகிழ்கிறோம்

அன்புடையீர்,

வணக்கம்

கம்பன் விழா வெள்ளி (5-5-95) மாலை ஆரம்பிக்கிறது. வழமைபோல் கம்பன் திருவுருவ ஊர்வலம் சரியாக 4.30மணிக்கு கம்பன் கோட்ட முன்றிலில் இருந்து ஆரம்பிக்க திருவருள் கூடியுள்ளது.

கம்பன் குடும்பத்தவர் அனைவரையும்கைகூப்பி அழைக்கின்றோம்.

நன்றி

கம்பன் கழகத்தினர்.

ஏற்கத் துணிந்திருக்கும் இளைய தலைமுறை



ஸ்ரீ. பிரசாந்தன் அமைப்பாளர் — த. ஜெயசீலன் பொருளாளர் — ச. மணிமாறன் செயலாளர் — த. சிவசங்கர் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருவே துணை

## சந்நிதியான் ஆச்சிரம திறப்பு விழா

செல்வசந்நிதி, தொண்டைமானாறு.

முருகன் அடியார்களின் பெருமுயற்சியால் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கென்று புதிதாக அமைக்கப்பெற்ற கட்டடத்தில்
1995ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 22ஆம் நாள் நாளை (05-05-95) வெள்ளி காலை 8மணி தொடக்கம் 10மணி வரையிலான சுபவேளையில்

உயர்திரு வே. முருகேசு சுவாமி
அவர்களின் தலைமையில்

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி
அவர்களால்
திறந்து வைக்கப்பட்டு அருளாசி வழங்கப்படும்.

★ மங்கல விளக்கேற்றல்
திரு. அ. நாகரத்தினம்
(அதிபர், குஞ்சர் கிருஷ்ணா பருத்தித்துறை)
திருமதி கனகாம்பிகை தங்கராசா
ஞாபகார்த்தமாக
சபாபதிப்பிள்ளை தங்கராசா (உடுப்பிட்டி)

★ ஆசியுரை
சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்
(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)

★ சிறப்புச் சொற்பொழிவு
திரு. ஆறு. திருமுருகன்
(ஆசிரியர், வசந்தா சுன்னாகம் - கம்பன்கழகம்)

அன்பர்கள், அடியார்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- சந்நிதியான் ஆச்சிரமம்.

[36513]

யாழ். வண்ணை அரசடி
விநாயக வருடாந்த
அலங்கார உற்சவ வைரவ மடை

## விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே

இன்று (04 - 05 - 1995) வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு வைரவப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து கோயில் முன்றிலில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்

மங்கள வாத்தியம்

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| S. சிதம்பரநாதன் | K. நித்தியானந்தம் |
| R. கேதீஸ்வரன் | K. சிவகுமாரன் |
| A. முருகானந்தன் | T. உதயசங்கர் |
| K. சிவதாஸ் | N. R. S. சுதாகரன் |

வில்லிசை

கலாவிநோதன் வில்லிசைப்புலவர்
க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின்
"கடிகணபதிவர அருளினன்"
என்னும் பொருள் பற்றி வில்லிசை நடைபெறும்

அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

- அரசடி இளைஞர்கள்.

(36512)

உ
சிவசக்திமயம்
உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி
தேவஸ்தான

## துவஜாரோகணம்

சுரும்பு முரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத்தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனங் குழைந்தென்னை எடுத்தாண்ட
அங்கயற் கண்ணெம் பிராட்டி
அரும்பு மிளநகை போற்றி யாரணநூபுரஞ்
சிலம்பு மடிகள் போற்றி.

அம்பாள் அடியார்களே!

சிவபூமியாகிய ஈழநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாண நகரின் வடபால் அமைந்த உடுவையம்பதியில் சகல ஆன்மாக்களும் வழிபாடு செய்து உய்யும் வண்ணம் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ மீனாட்சி அம்பாளுக்குப் பெருவிழாக்காணத் திருவருள் துணைகொண்டு நிகழும் மங்களகரமான யுவ வருடம் சித்திரை மாதம் 21 ஆம் நாள் (4-5-95) வியாழக்கிழமை துவஜாரோகணமாகி அன்று முதல் பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறும்.

சித்திரை மாதம் 21 நாள் 4 - 5 - 95
வியாழக்கிழமை
துவஜாரோகணம் பகல் 12.00 மணி

அத்தருணம் அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு தரிசித்து அம்பாளின் திருவருள் பெற்றேகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
உபயகாரர்

[8343]

# பொதுமக்களை அரசு வருத்துவது தீவிரவாதம் வளரவே உதவும்

## மனிதாபிமானத்துடன் செயற்படுவதே நெருக்கடியை குறைக்கும்

*அரசின் செயற்பாடுகள் குறித்து 30-04-95 'ராவய' பத்திரிகையில் வெளியான ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம்.*

விடுதலைப் புலிகளால் தோன்றியுள்ள அச்சுறுத்தலானது முற்றிலும் அரசைத் தோற்கடிக்கும் கொள்கையின் அடிப்படையிலானது என்பது தெளிவு.

### யுத்தத்தின் பலாபலன்கள்

விடுதலைப் புலிகள் அமைப்பு அரச படைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுவரும் நிலையில் அதை சும்மா பார்த்துக் கொண்டிருக்கும் ஆற்றல் அரசாங்கத்திற்கு இல்லை என்பது தெளிவு.

இருப்பினும் பெரிய எடுப்பில் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் யுத்தத்தினால் ஏற்படவுள்ள பலாபலன்கள் குறித்து பதற்றமின்றிச் சிந்திப்பது அவசியம்.

போர் ஒன்றுக்குப் பதிலாக சமாதானத் தீர்வொன்றைக் காண வேண்டும் என சிந்திக்க வேண்டிய நிலைக்கு வரவேண்டும்.

மனிதாபிமான காரணிகளைக் கவனத்தில் எடுக்காது நடத்தப்படும் யுத்தத்தில் எந்தவொரு தரப்பிற்கும் இறுதி வெற்றி கிடைக்காதென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெற்றி தோல்வியின்றி யுத்தத்தை நடத்துவதால் ஏற்படக்கூடிய சுமையை நாடு பொறுத்துக் கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் மீண்டும் யுத்தத்தை பெரியளவில் மேற்கொள்ளின் அதனால் ஏற்படப்போகும் பலாபலன் உக்கிர நிலைமை உருவாவது மாத்திரமே ஆகும்.

தற்போது தோன்றியுள்ள சூழ்நிலையில் அரசு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பது என முடிவு செய்தால் அது கௌரவத்திற்காக மேற்கொள்ளப்படும் யுத்தமாக மாத்திரமே அமையும். இதனால் வேறு எதுவித பலனும் ஏற்படப்போவதில்லை. இருப்பினும் செயலில் இறங்கு முன்னர் ஒரு முறையல்ல பலமுறை சிந்திக்க வேண்டும்.

### தோல்வி ஏற்பட்டால்

அடுத்ததாக, நடைபெறப் போகும் யுத்தத்தில் வெற்றிக்குப் பதிலாக தோல்வியைத் தழுவ நேரிடின் அதனால் ஏற்படப்போகும் பலாபலன்கள் என்ன? அவ்வாறான நிலைமை உருவாகின் தற்பொழுது உள்ள நிலைமைகளிலும் பார்க்க முழு நாடுமே வெட்கித் தலைகுனியவேண்டிய நிலைமை உருவாவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

அவ்வாறான ஒரு நிலைமை தோன்றுமாயின் அனைத்தும் பித்துப்பிடித்த செயற்பாடுகளாகி நாடெங்கும் குருதி சிந்தப்படுவதைத் தவிர்க்க முடியாது. மறுபுறத்தில், அரசாங்கம் எதைச் செய்ய முற்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தொடர்பாக மனிதாபிமான நோக்கில் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் யாழ்ப்பாண மக்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கியபோதும் அவை யாவும் தற்போது மீண்டும் மீளப்பெறப்பட்டுள்ளன என்பதை நாங்கள் மறக்கக் கூடாது.

கெரில்லா அமைப்பொன்றைத் தோற்கடிக்கும் நோக்கில் பொதுமக்களை வருத்தும் கொள்கைகளை அனுசரிக்க முயன்றால் அந்தக் கெரில்லா அமைப்பின் ஆற்றல் மென்மேலும் வளருமே அன்றி அழியாதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

### கிளாலி பாதை விவகாரம்

குறிப்பாக கிளாலிப் பகுதியைத் தடை செய்யப்பட்ட பகுதியாகப் பிரகடனம் செய்துள்ளதால் யாழ்ப்பாணத்திலிருந்து வரும், யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பொதுமக்களுக்கு இருந்து வந்த கஷ்டமான ஒரு போக்குவரத்துப் பாதைகூட மறுக்கப்பட்டுள்ளதென்பதை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தற்போது எவருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரமுடியாத நிலை உருவாகியுள்ளது.

அவ்வாறே வெளியே இருந்து யாழ் குடாநாட்டிற்கும் செல்ல முடியாது.

இதனால் பொதுமக்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தம் தீவிரமடைந்து அம்மக்கள் இராணுவத் தீர்வினை நோக்கியே தள்ளப்படுவார்கள் என்பது மாத்திரம் உண்மை. (இ-10)

## புதைபொருள் ஆய்வுக்கு கிழக்கில் 3 நிலையங்கள்

கொழும்பு, மே. 4

கிழக்கு மாகாணத்தில் புதைபொருள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக மூன்று ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் இவை அமையவுள்ளன.

புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம், சுவடிகள் திணைக்களம், கலாசார திணைக்களம் என்பன இணைந்து இவற்றை அமைக்கவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே. 4

'புதிய கல்வி நிர்வாக சீர்திருத்தம்' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சங்கானைக் கோட்ட கல்வி அதிகாரி திரு. ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வர்.

எடியுகேஷன் இன்ரநாஷனல், பிரட்ரிக் ஈபேட் மன்றம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து இதனை ஒழுங்கு செய்துள்ளன. (இ-14)

## ஆலயங்களில்

தென்மராட்சி, மே. 4

எழுதுமட்டுவாழ் மருதங்குளம் விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலைநடைபெறும்.

எண்ணெய் காப்பு இன்று நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் ஆலய ஸ்ரீ சுதர்சன சக்கர வழிபாடும் ஸ்ரீ இராமானுஜர் ஜெயந்தியும் இன்று வியாழக்கிழமை நடைபெறும். (இ-147)

## லான்ட்மாஸ்டர் சில்லுக்குள் சிக்கி இளைஞர் பலி

யாழ்ப்பாணம், மே 4

பனம் மட்டை ஏற்றி வந்த "லான்ட்மாஸ்டரில்" இருந்து தவறிவிழுந்த இளைஞர் ஒருவர் அதன் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்தார்.

சங்கானை பிரதான வீதியில் — மில்லடிக்கு அருகில் — நேற்றுக் காலை 10 30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தாவடியைச்சேர்ந்த செல்லமுத்து கமலராஜ் (16 வயது) என்ற இளைஞரே மரணமானவராவார். (ஒ-15)

## நிர்மாணி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 4

தமிழீழ நிர்வாக சேவையின் வெளியீடான நிர்மாணி காலாண்டு இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [ஐ-5]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே. 4

நல்லூர் வட்டத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு தமிழீழ நிர்வாகச் சேவைச் செயலகத்தில் நடைபெற உள்ளது.

இதில் ச.ச நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு நிர்வாகச் சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-7)

## இன்று

யாழ்ப்பாணம், மே 4

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி. ப. 2 30 மணிக்கு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் கோட்டப் பணிமனையில் நடைபெறும். (ஒ)

## ஈழத் தமிழருக்கு சென்னையில் கௌரவ பட்டம்

யாழ்ப்பாணம், மே. 4

குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்ட மின்பொறியியலாளர் திரு. க. கணேசலிங்கத்திற்கு தமிழகத்தில் உள்ள திருவாவடுதுறை ஆதீனம் "சித்தாந்த ரத்தினம்" என்னும் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

மேற்படி ஆதீனம் நடத்திய சைவசித்தாந்த நேர்முகப் பரீட்சை வகுப்பில் மூன்று ஆண்டுகள் பயின்று முதலாம் வகுப்பில் சித்தியடைந்ததற்காகவே இவருக்கு இப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் பட்டதாரியான இவர் இலங்கை மின்சார சபையில் பணியாற்றி, பின் சவூதி அரேபியாவில் உயர் பதவி வகித்தார்.

பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் சிறந்த கவிஞரும் ஆவார்.

திருவாவடுதுறை ஆதீனமே முன்னர் ஆறுமுகநாவலருக்கு "நாவலர்" என்ற பட்டம் அளித்து மேன்மைப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

நாடக அரங்கக் கல்லூரி

1997 ஆம் ஆண்டு
G. C. E. A/L
'நாடகமும் அரங்கியலும்'
வகுப்புக்கள்

ஆரம்பம்: 06 - 05 - 95
நேரம்: காலை 6. 30 மணி
இடம்: 1048, கே. கே. எஸ். றோட், (பூநாறி மரத்தடி) யாழ்ப்பாணம்

(36518)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## விஞ்ஞானபீடம்

1994/95 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் முதலாம் ஆண்டு கற்கை நெறிக்கு அனுமதிக்கப்பட்ட எல்லா பௌதிக விஞ்ஞான உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கும், முந்திய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டுத் தமது மேற்படி கல்வியை 1994/95 கல்வியாண்டில் ஆரம்பிப்பதற்கு பின்போட அனுமதி வழங்கப்பட்ட எல்லா மாணவர்களுக்கும் கணனி விஞ்ஞானத்திலும் ஆங்கிலத்திலும் அடிப்படைக் கற்கை நெறியொன்று 1995 மே 9ஆம் திகதி தொடக்கம் நடத்தப்படும்.

மேற்குறிப்பிட்ட மாணவர் யாவரும் விஞ்ஞான பீடத்திலுள்ள "P 1" விரிவுரை மண்டபத்தில் 1995-05-09 ஆம் திகதி முற்பகல் 9. 00 மணிக்கு நடைபெறவுள்ள அடிப்படைக் கற்கைநெறி வகுப்புக்கு வருகை தருமாறு வேண்டிக்கொள்ளப் படுகின்றனர். முதலாம் ஆண்டில் கணனி விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்பதற்கு அனுமதிக்கப்படவுள்ள மாணவர்கள் அடிப்படைக் கற்கை நெறியின் இறுதியில் நடத்தப்படவுள்ள ஆறிமுக கணனி விஞ்ஞானத் தேர்வில் அவர்கள் காட்டும் தேர்ச்சியின் அடிப்படையில் மாத்திரம் தெரிவு செய்யப்படுவர்.

- பதிவாளர்

(சி/1445)

கணக்கியல்
பிரத்தியேக
வகுப்பு
A/L 97
ஆரம்பம்
08 - 05 - 95
திங்கள் மாலை 5 00 மணி

D. SAM
76/2 கோவில் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
குறிப்பிடப்பட்ட மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்

[36514]

பட்டப்பின்
டிப்ளோமா
பொது நிர்வாகம்
2ஆம் அரை
ஆண்டிற்கான
விரிவுரைகள்
1995

மேற்படி படிப்பிற்கான விரிவுரைகள் 10 - 5 - 95 அன்று ஆரம்பமாகவுள்ளன.

— பதிவாளர்

(சி-1141)

## நன்றி நவில்கின்றோம்

திருமதி சண்முகம்பிள்ளை இராசம்மா

அவர்களின் மறைவின் போது வருகைதந்தும், அனுதாபம் தெரிவித்தும் மலர்வளையங்கள் சாத்தியும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு பலவழிகளிலும் உதவி புரிந்து இறுதியாத்திரையிலும் ஈமக்கிரியைகளிலும் பங்கு பற்றிய உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம்கனிந்த நன்றிகள்.

குடும்பத்தினர்

74/1, சட்டநாதர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(36515)

கலை வர்த்தக கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

G. C. E. A/L 97

புதிய பிரிவு
கலை வர்த்தக வகுப்புக்கள்
சனி, ஞாயிறு
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் 06 - 05 - 95
சனி காலை 8-00 மணி

நிர்வாகி

(சி- 1146)

இறைவனில் இணைந்த
4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 21 - 11 - 1920
விண்ணில்: 05 - 05 - 1991

திருமதி
மரியமுத்து மார்சலீன்பிள்ளை

"இறைவனில் உறைவது ஒன்றே - உன் மனநிறைவும் மகிழ்வும் ஆகட்டும்"

ஆன்மசாந்தித் திருப்பலி 05 - 05 - 1995 அன்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு இவரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தவர்களும், உறவினர்களும்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(36517)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மீண்டும் வேதாளம்...

மட்டக்களப்பில் தேடுதல் வேட்டை நடத்திய பொலிஸார் தமது வீட்டில் இருந்த இளைஞன் ஒருவனை அவனது வீட்டிற்குள்ளேயே வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளனர். கொலை செய்யப்பட்ட இளைஞன் நிராயுதபாணியாகவே இருந்தான் என்று அறிவிக்கப்படுகிறது.

அது மட்டுமன்றி தேடுதல் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த வேளை, சைக்கிளில் தங்களைக் கடந்து சென்ற மாணவன் ஒருவனையும் பொலிஸார் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளார்கள். அதனால் சோதனை போடுகிறோம், தேடுதல் நடத்துகிறோம் என்று கிழக்கு வாழ் தமிழ் இளைஞர்களையும், இளம் பெண்களையும் கொன்றொழிப்பதற்குப் படையினர் ஆரம்பித்துள்ளனர் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

நிராயுதபாணியாகத் தனது சொந்த வீட்டில் இருந்த இளைஞன் மீது உண்மையாகவே சந்தேகம் இருந்தாலும் கூட, அவனைக் கைது செய்து விசாரிப்பது தான் முறை. அவன் செய்த குற்றம் குறித்த தமது சந்தேகத்தை விவரித்து, குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதே பொலிஸாருக்குச் சட்டப்படி உள்ள பணி.

இளைஞனைச் சுட்டுக் கொன்றதன் மூலம் பொலிஸார் மனித உரிமை மீறலில் ஈடுபட்டிருப்பது அப்பட்டமாக நிரூபணமாகியுள்ளது. பாடசாலை விட்டு வந்த மாணவன் சுட்டுக் கொல்லப்பட்டதும் அந்த வகையிலதே.

தாம் ஆக்கிரமித்த தமிழ்ப் பிரதேசங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்குடன், மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறிக் கொண்டு, மனித உரிமைகளை மீறும் விதத்தில் தமிழர்களைப் படுகொலை செய்வதே அரசாங்கப் படைகளின் வழமையான செயற்பாடு!

தனது படைகளின் இந்தப் ''பச்சை''யான மனித உரிமை மீறல்களையும், படுகொலைகளையும் பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வைக்குள் அடக்கி, ஐக்கிய தேசியக் கட்சி அரசு அவற்றை மேலும் தூண்டி வந்தது. குற்றத் தடைப்புச் சட்டத்தை இயற்றி படுகொலைகள் புரியும் படையினருக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்கியும் வந்தது ஐ. தே. க. அரசு.

முந்திய அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களையும் நிதி மோசடி, ஊழல், லஞ்சம் என்பனவற்றையும் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறியே சந்திரிகா பதவிக்கு வந்தார்.

தமது ஆட்சியில் போர் இருக்காது; மனித உரிமை மீறல்களுக்கு இடந்தரப்படமாட்டாது; என்றெல்லாம் முழங்கியே சந்திரிகா ஆட்சிக் கட்டில் ஏறினார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் அதே பாதையிலேயே அவரும் நடக்கப் போகிறார் என்பதனை மட்டக்களப்புச் சம்பவங்கள் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

இப்போது, புதிய அரசின் பதவிக்காலத்தில், முன்னரை விடபலமடங்கு அட்டூழியங்களைப்புரிவதற்கு படையினர் ஆயத்தமாகி விட்டனர் என்பதே உண்மை.

தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் சிங்கள அரசாங்கங்கள் எல்லாம் ஒன்றே. அரச பொறுப்பை வெவ்வேறு கட்சிகள் கைப்பற்றினாலும், அவை தமிழர்களை மனிதர்களாகக் கருதி ஆட்சி நடத்துவதில்லை. எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தாலும் ஆயுதப் படைகள் தமது குணத்தை மாற்றுவதில்லை. தமிழர்கள் மீது இராணுவ ஆதிக்கத்தையும் அடக்கு முறையையும், படுகொலைகளையும் தொடரவே செய்வர்.

மட்டக்களப்பில் அது மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது. இராணுவ ஆதிக்கம் என்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியிருக்கிறது!

சிங்கள ஆட்சியில் தமிழருக்கு பாதுகாப்பில்லை; நிம்மதியுமில்லை; விடிவும் இல்லை என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்படுகிறது.

## பெரியளவில் யுத்தம் செய்ய வசதிகள் அரசிடம் இல்லை

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மே. 4

பெரிய அளவிலான யுத்தத்துக்கு நாம் நிச்சயம் போகமாட்டோம். அவ்வாறு ஒரு யுத்தத்தை நாம் விரும்பினாலும் கூட அதற்குப் போதுமான வசதிகள் அரசாங்கத்திடம் இல்லை.

— இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

''இந்தியா ருடே'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கொழும்பு சிங்களப் பத்திரிகைகள் நேற்று தலைப்புச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

படையினருக்கு துரோகம் இழைத்து போராளி அமைப்புக்கள் வளர்ச்சி பெறுவதற்கு உதவியதாக முன்னாள் ஜனாதிபதிகளான ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் மீது ஜனாதிபதி அந்தப் பேட்டியில் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தப் பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் சில கடந்த செவ்வாயன்று ''உதயனில்'' வெளியாகியிருந்தன. (ஐ-14)

## புலிகளிடம் ஏவுகணைகள்: இந்தியாவுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, மே. 4

விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விடுதலைப்புலிகள் வைத்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பது இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

இந்தியாவின் பிரபல பத்திரிகையான ''ரைம்ஸ் ஒவ் இந்தியா'' இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா விமானப்படையின் இரண்டு விமானங்களை விடுதலைப்புலிகள் அடுத்தடுத்து சுட்டு வீழ்த்திய சம்பவங்களுக்கு இந்தியப் பத்திரிகைகள் பெரும முக்கியத்துவம் அளித்து செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

விடுதலைப்புலிகளிடம் ஏவுகணைகள் இருப்பது ஸ்ரீலங்காவுக்கு மட்டுமல்ல இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் என்று ''ரைம்ஸ் ஒவ் இந்தியா'' தெரிவித்துள்ளது. (ஐ-14)

# முன்னாள் ஜனாதிபதிகள் பாவித்த கார்கள் ஏலத்தில்!

## அடுத்த வாரம் விற்கப்படும்

கொழும்பு, மே 4

முன்னாள் ஜனாதிபதிகளும் மற்றும் அமைச்சர்களும் தமது பிரத்தியேக பாவனைக்குப் பயன்படுத்திய பல ஆடம்பர கார்கள், 'ஜீப்' வண்டிகள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள நிதி விவகார, திட்டமிடல் இன விவகார, தேசியவள அமைச்சின் வளவில் எதிர்வரும் 10ஆம் திகதி இந்த ஏல விற்பனை இடம்பெறும்.

அரசாங்க நீதிமன்ற அனுமதி பெற்ற ஆணையாளர் ஒருவர் இந்த ஏல விற்பனையை நடத்துவார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பயன்படுத்திய – பதிவு செய்யப்படாத — ஆடம்பர வாகனமும்—

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா மற்றும் முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய — பதிவு செய்யப்படாத 'கடிலா' ஆடம்பர கார்களும்—

மற்றும் 11 கார்கள், 3 ஜீப் வண்டிகள் என்பனவும் அன்றைய தினம் ஏலத்தில் விடப்படவுள்ளன. (ஐ-14)

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக

## இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு நடத்த இணக்கம்

புதுடில்லி, மே 4

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பாகிஸ்தானும் இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பாகிஸ்தான் ஜனாதிபதி பாரூக் லெகாரியும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் சந்தித்து பேச்சு நடத்தினர்.

40 நிமிடங்களாக நடைபெற்ற அந்தப் பேச்சுகளின் பின்னர் கருத்து தெரிவித்த பிரதமர் நரசிம்மராவ் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பேச்சுகளை நடத்துவதில் தடையேதும் இல்லை என்று கூறினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவ நடவடிக்கை உகந்த வழி அல்ல என்று பாகிஸ்தான் ஜனாதிபதி லெகாரி தெரிவித்தார்.

தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என இரு நாடுகளின் தலைவர்களும் பின்னர் பத்திரிகையாளர்களிடமும் தெரிவித்தனர். பேச்சுக்கள் எப்போது நடைபெறும் என்ற விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பின்னர் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தானுடன் இருதடவைகள் இந்தியா யுத்தம் புரிந்துள்ளது. நீண்டகாலமாக நீடித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண இரு நாடுகளும் இணங்கியிருப்பது இரு நாட்டு உறவுகளில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. (ஐ-14)

### ஆய்வு

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்கு ஆய்வொன்று தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யுனிசெவ் ஸ்தாபனம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவரின் உதவியுடன் இந்த ஆய்வை மேற்கொண்டு வருகிறது. [ஐ-4]

## புலிகளின் குரல் வானொலியில்

04 – 05 – 1995
வியாழன் இரவு
- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — ''ஒன்றுபட்டுச் செயற்படுவோம்'' குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எங்களின் தேசம்

05 — 05 — 1995
வெள்ளி காலை
- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

வியாழன் மாலை
- ★ 5-01 — சிந்தனை தெறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன்விளையும் பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி-பதில் — விளையாட்டுத் தொடர்பானவை

## நாட்டை போருக்கான நிலையில் வைத்திருக்க அனுருத்த ஆலோசனை

### ஏனைய அமைச்சர்கள் நிராகரிப்பு

கொழும்பு, மே 4

நாட்டை போருக்கான நிலையில் வைத்திருக்கவேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்த யோசனையை அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா பாரிஸ் சென்ற வேளை — கடந்த புதன்கிழமை நடைபெற்ற — அமைச்சரவைக் கூட்டத்துக்கு அமைச்சர் ரத்வத்தையே தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டதால் நாட்டைப் போருக்கான நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார்.

ஆனால் அமைச்சர்களில் பலர் அந்த யோசனையை நிராகரித்ததோடு, போர் செலவினமானது என்றும் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதே உகந்தது என்று கருத்துத் தெரிவித்தார்கள்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் இரண்டு கப்பல்களை தாக்கி அழித்த சம்பவத்தின் பின்னர்— ஏப்ரல் 19ஆம் திகதி — நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் அனுருத்த இதே கருத்தையே தெரிவித்தார் என்றும் ஆனால் ஜனாதிபதி சந்திரிகா அதனை நிராகரித்தார் என்றும் சொல்லப்படுகிறது. (அ)

பிரேமதாஸாவின் ஆட்சியில் நடந்தது போன்று

# விடுதலைப் புலிகளின் தந்திரத்தில் சந்திரிகாவும் அகப்பட்டுவிட்டார்

## இப்படிச் சொல்கிறார் தினேஷ்

கொழும்பு, மே 4

''ஜனாதிபதி சந்திரிகா வடக்கு-கிழக்கு நெருக்கடியை முற்றிலும் தவறாகக் கையாண்டுள்ளார். கொலை செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சியில் நடந்தது போல தமிழீழ விடுதலைப் புலிகளின் தந்திரத்துக்குள் சந்திரிகாவும் அகப்பட்டுக் கொண்டார்.''

'ஐலண்ட்' ஞாயிறு இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தனா இவ்வாறு கூறினார்.

அவரது பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

★ கேள்வி: ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்த சமாதான நடைமுறை, பின்னர் மோதல் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் ரத்துச் செய்தமை, அதனால் ஏற்பட்ட பாதுகாப்புப் படைகள் மீதான திடீர்த் தாக்குதல்கள்—இந்த நிலைமையில் நாட்டின் இன்றைய நிலை பற்றிய உங்களுடைய கருத்து என்ன?

★ தினேஷ்: விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முயற்சி, கொல்லப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் முயற்சி போலவே தோல்வி கண்டுள்ளது. ஆகவே நாங்கள் மீண்டும் ஆரம்ப இடத்துக்கே வந்துள்ளோம். தம்மிடம் ஒரு தீர்வு உண்டு என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் எமக்கு உறுதி அளித்துள்ளார்கள். தீர்வு தமது ''பொக்கெற்றுக்குள்'' இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் அத்தீர்வு இன்னமும் மக்கள் முன்னிலையில் வைக்கப்படவில்லை.

இன்றைய நாட்டின் அரசியல் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது; தேசிய பாதுகாப்பும் பெரும் ஆபத்தில் இருக்கிறது. யதார்த்தத்தைக் கணக்கில் எடுக்காமல், தம்மை மிகை மதிப்பீடு செய்ததால் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வடக்கு-கிழக்கு நிலைமையைத் தவறாகக் கையாண்டுள்ளது.

★ கேள்வி: விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை ஒருதலைப் பட்சமாக ரத்துச் செய்தமை நியாயமானது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

★ தினேஷ்:- நியாயமானதோ இல்லையோ என்பதை விடுதலைப் புலிகள் தான் தீர்மானிக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயகப் போக்குடைய கட்சி அல்ல. அவர்களுடைய செயல் புதியதும் அல்ல.

★ கேள்வி: நீங்கள் சிறுபான்மையினரின் கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்த அதே வேளையில் பெரும்பான்மையினரான சிங்களவரின் உரிமைகளுக்காக வாதாடி வந்தீர்கள. சிங்களவர்களுக்கு ஆதரவான உங்களுடைய கொள்கைகள் இன்றைய நிலையில் நியாயமானவை என்று நீங்கள் கருதுகிறீர்களா?

★ தினேஷ்: எமது பிரஜைகள் அனைவரும் சம உரிமைகளை அனுபவிக்கும் ஒற்றையாட்சி நாட்டையே நாங்கள் ஆதரித்தோம். [illegible] களில் சிங்களவர் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். ஆகவே பெரும்பான்மையினரின் கருத்தைக் கணக்கில் எடுக்க வேண்டும்; சமத்துவமான பிரஜைகள் என்ற முறையில் சிறுபான்மையினரின் உரிமைகள் வழங்கப்படவேண்டும். மக்கள் ஐக்கிய முன்னணி இதைத்தான் ஆதரிக்கிறது சிங்களவர் மட்டும் தான் சகல உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்க வேண்டும் என்று அது ஒரு போதும் கூறியதில்லை.

★ கேள்வி; இன்றைய நிலைமையில் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுவது சாத்தியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

★ தினேஷ்;- எமது நாட்டில் எல்லோரும் சமாதானத்தை விரும்புகிறார்கள். எவ்விதத்திலும் சமாதானத்தைப் பெறுவதே தமது ஈடுபாடு என்று ஜனாதிபதி சந்திரிகாவும் கூறியுள்ளார். எமது நாட்டு மக்கள் வன்முறையாலோ அல்லது சட்ட மூலமாகவோ நாடு பிரிவதை விரும்பவில்லை. இந்த நெருக்கடியில் முன்னேற்றம் காணப்பதற்கு வடக்கு-கிழக்கில் ஜனநாயகப் போக்கை அறிமுகம் செய்ய வேண்டும். விடுதலைப்புலிகள் தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் ஜனநாயகத்துக்கு ஆதரவாக நிற்கும்; மற்றத் தேசியக் கட்சிகள் நாட்டின் இதர பாகங்களில் ஜனநாயகத்தை ஆதரிக்க நிற்கும். இப்படிச் செய்யாவிட்டால் துப்பாக்கி முனையில் தான் சமாதானம் ஏற்படும். அவர்கள் விரும்பிய தெல்லாம் பெறுவார்கள். ஆனால் வடக்கு - கிழக்குப் பொதுமக்[illegible] [illegible] ஜனநாயக முறையில், துப்பாக்கியின்றி வாக்குரிமையைச் சுதந்திரமாகப் பாவிக்க அனுமதித்து மக்களின் விருப்புத் தேர்வைப் பெறவேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் நிலவியது. உள்ளூர்த் தேர்தல்கள் நடத்தப்பட்டன மக்கள் பெரும் எண்ணிக்கையில் சென்று வாக்களித்தார்கள். படைகள் இப்பிரதேசத்தை வழமை நிலைக்கு மாற்றியிருந்தன என்பதையே காட்டின ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அதைத் தவறுதலாகக் கையாண்டது. கிழக்கின் இன்றைய நிலைமை முன்னர் இருந்த நிலைமையிலிருந்து முற்றிலும் தலைகீழான நிலைமை ஆகும்.

★ கேள்வி: உங்களைக் கொல்ல விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள் என்று செய்திகள் வந்தன. இவை எவ்வளவுக்கு உண்மை? ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையில் அரசாங்கம் உங்களுடைய பாதுகாப்புக்கு போதிய உத்தரவாதம் அளித்துள்ளதா?

★ தினேஷ்: மக்கள் ஐக்கிய முன்னணி மலைமையகத்துக்கு அண்மையில் அச்சுறுத்தல் செய்யப்பட்ட பின் கட்சி அரசாங்கத்துக்குப் பல வேண்டுகோள்களை விடுத்தது. இதுவரை எதுவும் நடைபெறவில்லை. நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது என்னுடன் இருந்த இரண்டு பாதுகாப்பு ஊழியர்கள் தான் இப்போதும் என்னுடன் இருக்கிறார்கள். விசேடமாக எதுவும் செய்யப்படவில்லை. வாசலில் பொலிஸார் கூட இல்லாததை நீங்கள் அவதானிக்க முடியும். [ஐ-4]

தாக்குதலை எதிர்கொள்வதற்கு

## விமானங்களில் விசேட கருவி பொருத்தப்படும்

கொழும்பு, மே. 4

போர் முனையில் பணியில் ஈடுபட்டுள்ள விமானங்களில் விமான எதிர்ப்பு ஆயுதங்களை எதிர்த்து செயற்படக்கூடிய கருவிகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக நவீன கருவிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இத்தகைய கருவிகள் பொருத்தப்படும் வரை வடபகுதிக்கான விமானப் போக்குவரத்தை நிறுத்தி வைப்பது என்று படை உயர்பீடம் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

வடக்கு-கிழக்கு படை நடவடிக்கைக்கு

## கூடிய அதிகாரங்களுடன் இரு தளபதிகள் நியமனம்

கொழும்பு, மே 4

வடக்கு கிழக்கு படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கூடிய அதிகாரங்கள் கொண்ட இரு இராணுவ தளபதிகளை அரசு நியமித்துள்ளது.

மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரட்னா, மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

படை நடவடிக்கைகளுக்காக மேலும் ஆயிரம் பேரை புதிதாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்கும்—

தேவையான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சகலபடை நடவடிக்கைகளையும் திட்டமிட்டு செயற்படுத்துமாறும் இவர்கள் இருவரும் பணிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## வடக்கே உணவு வகைகள் தடையின்றி செல்லும்

### ஜனாதிபதியின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, மே 4

வடபகுதியில் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கட்டுப்பாடு ஏதுமின்றி விநியோகிக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபெண்டி தெரிவித்துள்ளார்

அதேசமயம் வடபகுதியில் நிலை கொண்டுள்ள படையினருக்கும் தங்கு தடையின்றி உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை —

மாஹோ, லங்கா முடிதா கப்பல்கள் காங்கேசன்துறையில் தொடர்ந்து தரித்து நிற்கின்றன.

ஏற்கனவே பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிய மாஹோ கப்பல் கடந்த சனி நண்பகலுடன் கடற்படையினரின் உத்தரவுக்கமைய காங்கேசன்துறை திரும்பிச் சென்றது. தெரிந்ததே. [ஒ-4-6-173]

போர் முனைகளில் காயமடையும்

## படையினருக்கு அவசர சிகிச்சைக்கு ஏற்பாடு

கொழும்பு மே. 4

வடக்கு-கிழக்கு பகுதிகளில் காயமுறும் இராணுவத்தினருக்கு அவசர சிகிச்சை வழங்குவதற்காக அவ்வப்பகுதி வைத்தியசாலைகளில் விசேட ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

சுகாதார அமைச்சர் ஏ.எச். எம் பௌஸியின் பணிப்புரையின் பேரில்சுகாதாரத்திணைக்களம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் விசேட மருத்துவர் குழு ஒன்று சேவையில் ஈடுபட்டுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் விழா நாளை நல்லூரில் கோலாகலமாக ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், மே 4

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள விழாப் பந்தலில் ஆரம்பமாகும்.

மாலை 4.30 மணிக்கு நல்லூரில் உள்ள கம்பன் கோட்டத்திலிருந்து கம்பன் திருவுருவப்பட ஊர்வலம் ஆரம்பமாகும்.

ஈழத்தின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களினதும் சில கல்லூரிகளினதும் இசைத்தேவ அணி நடை இசைக்குழுவினரதும் இசை மழை பொழிய, இளம் பெண்கள் பூக்கள் சொரிய, சுமங்கலிகள் கும்பங்கள் தாங்கிவர, கம்பனின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

'மகரயாழ்'' விருதுபெறும் டாக்டர் து. வி. ஜெயகுலராஜாவும், முதறிஞர் கௌரவம் பெறும் அறிஞர்களும் மற்றும் பிரமுகர்களும் இவ் ஊர்வலத்தில் அழைத்து வரப்படுவர்.

5 மணிக்கு ஊர்வலம் விழாப் பந்தலை வந்து அடையும்.

இணுவையூர் திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி திரு. கே. ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகும்.

மங்கள விளக்கினை திரு. ஈ. சரவணபவன் தம்பதியினர் ஏற்றி வைப்பர்.

தொடர்ந்து செல்வி பரமேஸ்வரி கணேசனின் கடவுள் வாழ்த்தும், கம்பன் வாழ்த்து அகவணக்கம் என்பனவும் நடைபெறும்.

ஆசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி, வண. ஆயர் மேதகு தோமஸ்சவுந்தரநாயகம், வண. பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் வழங்குவர்.

வரவேற்புரையை தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையுரையை நிகழ்த்துவார்.

வாழ்த்துரையை சிவத்தமிழ் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி வழங்குவார்.

தொடர்ந்து முதறிஞர் கௌரவிப்பு நடைபெறும். திருவாளர்கள் எவ். எக்ஸ். ஸி. நடராசா, நா. முத்தையா, க. வீரகத்தி, க. வைத்தீஸ்வர குருக்கள், க. வேலுப்பிள்ளை, பி. எஸ். மணியம் ஆகியோர் இம்முறை கௌரவம் பெறுகின்றனர்.

தொடர்ந்து இவ் வருடத்துக்குரிய 'மகரயாழ்'' விருதினை, வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜாவுக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் வழங்கி கௌரவிப்பார்.

இதனை அடுத்து வித்துவான் குமாரசாமி தேவன் — யாழ்ப்பாணம்: வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோர் ஞாபகார்த்த கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்குதல்,

அங்கவீனர், கண்பார்வை அற்றோர், முதியோர் இல்லம் ஆகிய வற்றுக்கான உதவி வழங்கல் என்பன நடைபெறும்.

அடுத்து கம்பமலர் நூல் வெளியீடு இடம் பெறும். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராஜா நூலை வெளியிடுவைக்க கண் வைத்திய நிபுணர் எஸ். குகதாசன் முதற் பிரதியை பெறுவார்.

இறுதியாக மானிப்பாய் கலைக்கோயில் திருமதி லீலா செல்வராஜாவின் மாணவிகள் வழங்கும் ஆடல் வேள்வி இடம் பெறும். (இ-14-11)

முஸ்லிம் மாணவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்:

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரைகள் ஒத்திவைக்கப்படும்

கொழும்பு, மே. 4

எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த கிழக்கு பல்கலைக்கழக பீடங்களின் விரிவுரைகள் ஒத்திவைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு பல்கலைக்கழகத்தை சேர்ந்த முஸ்லிம் மாணவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அற்ற சூழ்நிலை அங்கு நிலவுவதால் அவர்கள் விரிவுரைகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக காரணம் காட்டி விரிவுரைகள் ஒத்திவைக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபாலவுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

அதன்போது விரிவுரைகளை ஒத்திவைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து அமைச்சர் அஷ்ரப்பும், பேராசிரியர் விஸ்வவர்ணபாலாவும் விரிவாக உரையாடினர். (ஐ-14)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், மே. 4

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான ஏப்பிரல் மாதத்துக்குரிய சம்பளம் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படும். (இ-5)

பேராசிரியர்

லூதர் ஜெயசிங்கம்

பொது அறிவுப் போட்டி 95

யாழ். றோட்டறக்ற் கழகம் போஸ்கோ நிறுவன ஆதரவில் நடாத்தும் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான 6ஆவது பொது அறிவுப் போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ். நகர பாடசாலைகள்

இடம்: பரியோவான் கல்லூரி
காலம்: இன்று (04-05-95)
நேரம்: பி. ப 2.30 மணி

வலிகாம பிரிவு பாடசாலைகள்

இடம்: உடுவில் மகளிர் கல்லூரி
காலம்: 06-05-95 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

யாழ். றோட்டறக்ற் கழகத்தினர்

அன்பளிப்பு:

போஸ்கோ நிறுவனம்

(36516)

OBITUARY

EDMUND R A PAUL

The remains of late Edmund R A Paul, beloved son of late Mr & Mrs R J Paul Brother of the late Queeny Thomas, Louis Paul & Brother in law of Mr. George Thomas will be removed for burial to St Mary's Burial grounds after Holy Mass Service at O L R Church at 8-30 a m. on 4th May 1995.

INFORMANT:

Louis A. Paul.

No 99, Chapel Street,
Jaffna

(36507)

ஆதவன் நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## அமைச்சர்கள் அஞ்சலி

கொழும்பு, மே. 4

அவ்ரோ மீதான ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்த 3 லேக்ஹவுஸ் நிறுவனப் பத்திரிகையாளர்களது அஸ்தி நேற்றுக் காலை முதல் கொழும்பு கலாபவனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இவர்களின் அஸ்திக்குகல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன, சமயகலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வி. சுரவீர லேக்ஹவுஸ் தலைவர் லஷ்மன் ஜயவர்த்தன ஆகியோர் உட்படபவர் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். (ஒ-5)

அடுத்த மாதம் 6 ஆம் திகதி

# தமிழீழத்தில் மாணவர் எழுச்சிநாள்: சிறப்பாக செயற்படுத்த ஏற்பாடு

### மாவட்ட ரீதியாக நிகழ்வுகள் நடைபெறும்

யாழ்ப்பாணம், மே. 4

தமிழீழ மாணவர் எழுச்சி நாளைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்கள் யாவும் தற்போது தமிழீழம் எங்கும் புதிய உத்வேகத்துடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு சென்ற வருடம் ஜூன் 5 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது மாணவர் எழுச்சிநாள் இந்த வருடம் ஜூன் 6 ஆம் திகதி நடைபெறுமென விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

சென்ற வருடம் கோட்ட ரீதியாக நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகளை இந்த வருடம் மாவட்ட ரீதியாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்முறை தமிழீழம் எங்கும் மாணவர் எழுச்சி நாளன்று பாடசாலைகளில் காலை 8.30 மணிக்கு தேசியக் கொடி ஏற்றத்துடன் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து மாணவர் எழுச்சி நாள் தொடர்பான கலை நிகழ்ச்சிகளும், சிரமதானமும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும். இதற்கான ஏற்பாடுகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் மேற்கொள்வர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ மாணவர் எழுச்சிப் பேரணி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இப்பேரணியில் யாழ். மாவட்டத்திலுள்ள 14 கல்விக் கோட்டங்களிலிருந்தும் ஊர்திகள் எடுத்து வர ஏற்பாடாகி உள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் நடுவப் பணியகத்தில் நேற்று தமிழீழ மாணவர் எழுச்சி நாள் ஏற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ந. இன்பன் இத்தகவல்களைத் தெரிவித்தார். (ஒ-4)

# வடபகுதி உணவுக் கப்பல்களுக்கான பாதுகாப்பு வாபஸ் பெறப்படுமா?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கென எடுத்து வரப்பட்ட உணவுப் பொருட்களை கடற்படையினர் பறித்தெடுத்ததைத் தொடர்ந்து — மீதி நிவாரண உணவுப் பொருள்களை பருத்தித்துறையில் இறக்கும்போது வழங்கும் பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நிறுத்திக்கொள்ளுமா என்ற சந்தேக நிலை உருவாகி உள்ளது.

தமது பாதுகாப்பில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களை கடற்படையினர் பறித்தெடுத்தது தமது சேவைக்கு குந்தகம் விளைவித்துவிட்டதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வட்டாரங்கள் கருதுகின்றன போலும்.

கடற்படையினரின் செயல் தமது நடுநிலைமை கலந்த மனிதாபிமான சேவைக்குப் பாதகமாக அமைந்ததால், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியை நிறுத்துவது குறித்து செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

இது சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஜெனிவாவில் உள்ள தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அறியவருகிறது.

இதேவேளை நேற்று புனர்வாழ்வு அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களைத் தொடர்ந்து கப்பல் மூலம் அனுப்புவது குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது. இந்த மாநாட்டில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளும் கலந்து கொண்டதாக அறியப்படுகிறது.

# தமிழ்நாட்டில் இன்று நடக்கும் ஹர்த்தால்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரி இன்று மிகப் பெரிய அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

திமுகழகமும் மற்றும் எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ள இன்றைய ஹர்த்தாலின் போது வன்செயல்கள் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஆந்திரா, கர்நாடகம் ஆகிய அயல் மாநிலங்களில் இருந்து மேலதிக பாதுகாப்புப் படையினர் தருவிக்கப்பட்டுள்ளனர்.

ஹர்த்தாலின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கலாம் என்று கருதி சுமார் 30 000 பேர் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமது கட்சி ஆதரவாளர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்தன. (அ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

17 வயதுப் பிரிவு: கரவெட்டி விக்னேஸ்வரா எதிர் இராமநாதன் மகளிர் கல்லூரி.

19 வயதுப் பிரிவு: யாழ். இந்து மகளிர் எதிர் வல்வை மகளிர் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் எதிர் மகாஜனாக்கல்லூரி. (உ-7)

# தரைத் தொடர்பு ஏதுமற்ற நிலையில் 35,000 துருப்புகள்

கொழும்பு, மே 4

வடபகுதியில் பலாலி, ஆனையிறவு, தீவுப்பகுதி, வெற்றிலைக்கேணி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற இராணுவ முகாம்களில் — வேறு தரைத் தொடர்புகள் அற்ற நிலையில் — இருக்கும் ஸ்ரீலங்காப் படைகளின் முப்பதினாயிரம் துருப்புகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் மூலமான விநியோகத்தில மட்டுமே இந்த முப்பத்தினாயிரம் துருப்புகளும் தங்கி இருந்ததாகவும்—

விமானப்படை விமானங்களை ஏவுகணை கொண்டு புலிகள் தாக்கத் தொடங்கியதையும் கடற்படையின் நடமாட்டத்தைக் கடற்புலிகள் கட்டுப்படுத்தி வருவதையும் அடுத்து இந்தத் துருப்பினருக்கான விநியோகம் கேள்விக்குறியாகியிருப்பதாகவும்—

செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் அரசு குழம்பிய நிலையில் காணப்படுவதாகவும் செய்தி ஏஜென்சி ஒன்று குறிப்பிட்டது. (உ-7)

# பழுதடைந்த இறைச்சியை விற்றவருக்கு குற்றப்பணம்

யாழ்ப்பாணம், மே. 4

வலி கிழக்கு பிரிவில் உள்ள மாட்டிறைச்சிக் கடை ஒன்றில் பழுதடைந்த முதல் நாள் இறைச்சியை விற்பனை செய்தும், விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்திருந்த கடை உரிமையாளர் ஒருவரைத் தமிழீழ வலி-கிழக்குப் பகுதி உணவு மருந்து பரிசோதகர் திரு அ. நவரத்தினம் திடீர்ப் பரிசோதனையின் போது கண்டுபிடித்தார்.

கடையில் விற்பனைக்காக கையிருப்பில் இருந்து எஞ்சிய இறைச்சி புதைக்கப்பட்டது. உரிமையாளரை தமிழீழ முதன்மை உணவு அலுவலர் வைத்தியக் கலாநிதி தா. அருள் நேற்று விசாரணை செய்தார்.

உரிமையாளர் தவறை ஒத்துக் கொண்டுள்ளதன் பேரில் குற்றப்பணம் செலுத்தும்படி பணிக்கப்பட்டுள்ளார். (ஓ)

# யாழ்ப்பாணத்துக்கு 4 கல்வி வலயங்கள்?

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களை நான்காக அதிகரிப்பது குறித்து மாகாண கல்வி அமைச்சு மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாக அறியவருகிறது.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் தீவகத்திற்கு தனித்தனியாக நான்கு வலயங்களை அமைப்பது குறித்தே தீவிரமாகப் பரிசீலனை செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

இந்த வலயங்களுக்கு மேற்பார்வையாக பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஒருவரும் பணியாற்றுவார். ஜூலை மாதமளவில் இப்புதிய திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது இரண்டாக உள்ள கல்வி வலயங்களை மூன்றாக அதிகரிப்பதற்கு ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவது தெரிந்ததே. (அ-4)

## சுருக்கெழுத்தாளர் பரீட்சை 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடக்கும்

கொழும்பு, மே. 4

அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்களுக்கு சுருக்கெழுத்தாளர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், கிளிநொச்சி மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை யாழ் கல்வி வலயம் ஒன்றில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு ஐ. சிவானந்தன் தெரிவித்தார். (ஒ-4-7)

அவசரமாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாக நாடு திரும்பினாராம்.—

வெரித்தாஸ் வானொலி இதனை நேற்றுத் தெரிவித்தது.

இவருடன் நீதி மற்றும் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் நாடு திரும்புகின்றார்.

அமைச்சர் பீரிஸ் புதுடில்லி விஜயத்தை முடித்துக் கொண்டு நியூயோர்க் செல்ல முன்னர் திட்டமிட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

## கைது

கொழும்பு மே 4

ஜப்பானில் சுரங்க ரயிலில் நடத்தப்பட்ட விஷவாயுத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட மத அமைப்பான ''அவும் ஷின்றிகியோ'' வின் மற்றொரு தலைவரான அயோ ஜாமா என்பவர் ஜப்பானியப் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மேற்படி மதகுழுவின் தலைவர் ஷோகா அஷ ராவின் முக்கிய உதவியாளர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருத்த இவர்கள் ஹெலி மூலம் பலாலிக்குச் செல்வதைத் தவிர்த்து கப்பல் மூலம் அங்கு சென்றடைந்ததாகத் தெரியவந்தது.

பலாலிக்கான விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருப்பதனால் அவர்கள் தொடர்ந்தும் சில தினங்களாக பலாலியிலேயே தங்கி இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-7)

## 50 வீத இலங்கையர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

இலங்கையில் 12 வருட காலங்களாக நடைபெற்று வரும் யுத்தம் முடிவுக்கு வர அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர்.

என்ற சர்வதேச ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து இந்த புள்ளி விவரம் வெளியாகியுள்ளது. (ஒ-14)

உ

எழுதுமட்டுவாழ் மருதங்குளம்

திருவருள்மிகு

ஸ்ரீமஹா கணபதிப் பெருமான்

தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோக்ஷண

மஹாகும்பாபிஷேக பெருவிழா

நிகழும் யுவ வருஷம் சித்திரைத்திங்கள் 22 ஆம் நாள் (05-05-95) வெள்ளிக்கிழமை 9.45 - 10.19 மணிவரையுள்ள மிருகசீரிட லக்ன சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு

சிவாகமகிரியாதத்வநிதி கிரியாகலாமணி

சிவப்பிரம்மஸ்ரீ த. சோமாஸ்கந்தக்குருக்கள்

(கந்தசாமிகோவில் பிரதமகுரு வேரற்கேணி மட்டுவில்)

(36519) தேவஸ்தானம்

மரண அறிவித்தல்

கனகரத்தினம் ஸ்ரீபத்மநாதன்

(இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

நல்லூரைச் சேர்ந்த கனகரத்தினம் ஸ்ரீபத்மநாதன் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி M. C. ரட்ணம் அவர்களின் அன்பு மகனும், லக்ஷ்மிதேவியின் அன்புக் கணவரும், திருமதி கனகாம்பிகை வேலும்மயிலும் அவர்களின் அன்புச்சகோதரரும், Dr. வேலும்மயிலும் அவர்களின் அன்பு மைத்துனரும், Dr. A. கோபிகிருஷ்ணாவின் அன்பு மாமனாரும், சுந்தையா கதிர்காமத்தம்பி (LONDON), வள்ளிநாயகி பாஸ்கரன் (CANADA), காலஞ்சென்ற மகேஸ்வரி சிவஞானரட்ணம், சுந்தையா சுப்பிரமணியம் (CANADA) புனிதா ராமச்சந்திரன் (AMERICA) ஆகியோரின் அன்புத் மைத்துனரும் கீதாஞ்சலி சிவஞானரட்ணத்தின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (4-5-95) மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:

திருமதி ஸ்ரீபத்மநாதன்

171/6, பருத்தித்துறை வீதி நல்லூர்
மனோன்மணி அம்மன் கோவிலருகில்

(36520)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org